# யுத்த நிறுத்தத்திற்கு முன் எல்லைகளை பலப்படுத்த படையினர் முயற்சி!

விலை ரூபா 5-00


ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 25 இதழ் 310
யாழ்ப்பாணம் ஞாயிற்றுகிழமை 11-12-1994


(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுததம் ஒன்று ஏற்படுத்துவதற்கு முன்னர் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் எல்லைகளை பலப்படுத்த வேண்டுமென இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

இதுகுறித்து இராணுவ தலைமைப்பீடம் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் ரத்வத்தைக்கு,ம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் விளக்கிக் கூறியுள்ளார்களாம்.

விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்தம் மேற்கொள்வதற்கு முன் எல்லைகளில் பலத்த பாதுகாப்பு போடப்படவேண்டியதன் அவசியம் பற்றியும்

(6ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்த காலத்தில்

### படையினருக்கு ஆயுதங்கள் வரும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இம் மாத முடிவிற்குள் அரச படையினர் யுத்தநிறுததம், ஒன்றை ஏற்படுத்தும் பட்சத்தில் யுத்த நிறுத்த காலத்தில் படையினருக்கு யுத்த தளபாடங்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

தற்போது ரெண்டர்கோரப்பட்டுள்ள யுத்த தளபாடங்கள் பல' அடுத்த வருட முற்பகுதியில் இலங்கை வந்து சேருமென எதிர்பார்க்கப்படுவதால் யுத்த நிறுத்த காலப் பகுதியிலேயே இந்த ராணுவ

(6ம் பக்கம் பார்க்க)

# நேற்று முன்தினம் அதிகாலை மன்னாரில் புலிகள் அதிரடி: நான்கு இராணுவம் உயிரிழப்பு

## காவலரண்களும் அழிப்பு

[மன்னார்]

**மன்னார்-வங்காலையில்நேற்று முன்தினம்அதிகாலைதமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய அதிவேக அதிரடித் தாக்குதலில் நான்கு படையினர் கொல்லப்பட்டனர். பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. மூன்று காவலரண்களும் இராணுவத்தினரின் இரு வீடுகளும் முற்றாக அழிக்கப்பட்டன.**

வங்காலையிலுள்ள இராணுவ தொடர் காவலரண்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை 2-00 மணியளவில் இத் தாக்குதலை நடத்தினார்கள்.

விடுதலைப்புலிகள் நடத்திய ஐந்து நிமிட அதிவேக அதிரடி தாக்குதலில் கொல்லப்பட்டவர்களைத் தவிர ஏனையோர் காயங்களுடன் தப்பியோடி விட்டனர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்;

ரி 56-2 ரக துப்பாக்கி 1, ரி 56 ஒன்று ரகத் துப்பாக்கி 1, ரி 81 ரக துப்பாக்கி 1, 40 மி. மீ. கைத்துப்பாக்கி 1, ஏ. கே. ரவைக்கூடுகள் 5, ரி 81 ரவைக்கூடுகள் 4, 40

(6ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. நிதயில் டி. பி. பெரும் மோசடி

(கொழும்பு)

ஐ. தே. க. நிதியில் முன்னாள் ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்க பெரும்மோசடிகளை செய்துள்ளதாக கட்சி எம். பிக்கள் பலர் குற்றம் சாட்டியுள்ளனர்.

கட்சிப் பொருளாளரின் ஆலோசனையின்றியும் கட்சியினர் எவருக்குமே எதுவும் தெரிவிக்காமலும் பெருமளவு

(6ம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களை ஐ. தே. க. பொறுத்திருந்து பார்க்கும்

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் வடக்கு கிழக்குப் பிரச்னையை தங்களால் தீர்க்கமுடியும் என்று கூறுகிறார்கள், எதற்கும் நாங்கள் பொறுத்திருந்து

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் பதில் அரசுக்கு கிடைத்தது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே பிரபாகரன் அரசுக்கு அனுப்பிய கடிதம் நேற்று அவர்களுக்கு கிடைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட இக்கடிதத்தில் தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்துவது அடுத்த கட்ட சமாதான பேச்சுகளை ஆரம்பிப்பது தொடர்பாக அமைச்சர் ரத்வத்தை புலிகளுக்கு அனுப்பிய கடிதத்திற்கு பதிலாகவே மேற்படி கடிதம் அரசுக்கு அனுப்பிவைக்கப்

(6-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம், பொலிஸ் சட்டத்திற்கு உட்பட நடக்க வேண்டும்

(கொழும்பு)

இராணுவமும், பொலிசும் சட்டத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டும், சட்டத்திற்கு புறம்பாகஇவர்கள்நடக்கக்கூடாது.

இவ்வாறு அமைச்சர் ஜி. எல். பீரிஸ்'மனித உரிமைகள் தினம்' தொடர்பாக நேற்று கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்,

அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வரப்படும்போது நாடாளுமன்றமும், நீதியமைச்சும் மனித உரிமைகள் தொடர்பாக அக்கறை செலுத்தும் விதத்தில் அரசியலமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்படும். மேலும் அவசர காலச் சட்டம் அமுலில் உள்ள

(6-ம் பக்கம் பார்க்க)

## தலைமையக இடமாற்றினல் விமானப்படை முரண்பாடு

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படை அதிகாரிகளுக்கிடையில் பலத்த முரண்பாடுகள் நிலவி வருவதாக தெரியவருகிறது.

விமானப்படை தலைமையகத்தை மாற்றுவதென பாதுகாப்புசபை எடுத்த முடிவை அடுத்தே பல விமானப்படை அதிகாரிகள் முரண்பாடு கொண்டுள்ளனர்.

மேற்படி விமானப்படை தலைமையகமானது கொழும்பு கோட்டையிலுள்ள ஒரு ஐந்து நட்சத்திர விடுதிக்கு அண்மையான இடத்திற்கு மாற்றுவதற்கு முடிவு எடுக்கப்பட்டது.

(6-ம் பக்கம்பார்க்க)

## இந்திய பிரதமர் ராவ் பதவி விலக வேண்டும்

[புதுடில்லி]

இந்தியாவில் நாலு மாநிலங்களில் ஏற்பட்ட தேர்தல் தோல்விக்கு தார்மீகப் பொறுப்பேற்று பிரதமர் நரசிம்மராவ் உடனடியாக பதவி விலக வேண்டுமென எதிர்க்கட்சியான பி. ஜே. பி. யின் தலைவர் திரு. அடல்பிஹாரி வாஜ்பாய் கேட்டுள்ளார்.

பி. பி. ஸி. க்கு அவர்

(6ம் பக்கம் பார்க்க)

## லக்ஷ்மன் கதிர்காமர் நாடுதிரும்பினர்

[கொழும்பு]

வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் தமது இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுக் காலை நாடு திரும்பினர்.

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ், சபாநாயகர் மற்றும் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல சிரேஷ்ட அமைச்சர்கள் ஆகியோரோடு வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளை அவர் நடத்தியது குறிப்பிடத்தக்கது

இரு தேர்தல்களின் பின்னர்

(6ம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ்-அ.தி.மு.க.கூட்டணி தமிழகத்தில் ஏற்படலாம்

(சென்னை)

தமிழகத்தில் மீண்டும் காங்கிரஸ் அ. தி. மு. கவுடன் கூட்டுச்சேரும் வாய்ப்பு இருப்பதாக தமிழகத்தின் பிரபல பத்திரிகையாளரான பி. சி. கணேசன் பி. பி. சிக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தென். மாநிலமான ஆந்திரா, கர்நாடகாவில் காங்கிரசுக்கு ஏற்பட்ட படு தோல்வி 96-ம் ஆண்டு முற்பகுதியில் நடைபெறவுள்ள

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்


ஆங்கிலம் கணிதம் 95

ஆண்டு 5, 6ல் இருந்து O/L வரை விசேடமாக ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும் ஆசிரியர் B. Sc 85, சிவன் கோவிலடி. மணல்தறை லேன், திருநெல்வேலி. (சி-1341)

மணமகள் தேவை

கனடாவில் வாழும் அந்த நாட்டின் குடியுரிமை பெற்ற 30 வயதான, செவ்வாய்க் குற்றமுள்ள உறவினருக்கு அழகிய மணப்பெண் தேவை. சாதகத்துடன் நேரில் வரவும் சுரேந்திரன், 134, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி1345)

குருமாற்ற பலாபலன்கள் விற்பனையாகின்றன

சத்யாவின் வியாழ மாற்றம் ரூபா 10/-. யுத்த நிறுத்தத்துடன் அமைதிப் பேச்சுக்கள் பரிணும வளர்ச்சியடையும். பாடசாலை உபகரணங்கள் காகிதாதிகளுக்கு; சுரேகா புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (சி-1343)



யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்

### தடைநீக்க அறிவித்தல்

இனிப்பு வெதுப்பி, பணிஸ், கேக் (அடைகேக் உட்பட) போன்ற ஆடம்பர உற்பத்திகளுக்கு விதிககப்பட்ட தடை

12 – 12 – 94 நாளை திங்கட்கிழமை முதல் நீக்கப்படவுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

★ மா தட்டுப்பாடு ஏற்பட்டதனால் மக்களின் நன்மை கருதி வெதுப்பியை கூடுதலாக உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடன் விதிக்கப்பட்ட தடைக்கு ஒத்துழைப்பு கொடுத்த சகல வெதுப்பக உரிமையாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மாவட்டத் தலைவர்,
யாழ். மாவட்ட
வெதுப்பக உரிமையாளர் சங்கம்,
183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(ஏ-4580)


# உப உணவுகளை
## தனியாரும் தருவிக்கலாம்

(கொழும்பு)

வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற உணவுப் பொருட்களை இனி மேல் தனியார்துறையினரும் இறக்குமதி செய்யலாம் என உணவு அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நேற்று கொழும்பில் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் இத்தகவலை தெரிவித்தார். க-இ

## பத்தொன்பது ஆங்கில ஆசிரியர்கள் நியமனம்


(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு 19 ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ். கல்வித்திணைக்கள வலயம் ஒன்றுக்கு ஏழு ஆங்கில ஆசிரியர்களும் வலயம் இரண்டிற்கு பன்னிரண்டு ஆங்கில ஆசிரியர்களும் நியமனம் பெற்றுள்ளார்கள்.

நியமனம் பெற்ற ஆங்கில ஆசிரியர்களின் விபரம் வருமாறு: வலயம் ஒன்றுக்கு: திரு என். எம். பிரபாகரன், (மண்டைதீவு) திரு. பி. டபிள்யூ நவராசா - ஊர்காவற்றுறை, திரு. ஏ. கே ஜனகன் - யாழ்ப்பாணம், திரு. கே. பத்மராசா - யாழ்ப்பாணம். செல்வி ஐ. பரராஜசிங்கம் - யாழ்ப்பாணம், செல்வி எஸ். துஷ்யந்தி - யாழ்ப்பாணம், செல்வி ரி. தாரணி - யாழ்ப்பாணம்.

யாழ். கல்வித திணைக்கள வலயம் இரண்டிற்கு திரு. சீ. சிறிஸ்கந்தராசா - தாழையடி, திரு எம். ஜே. எஸ். முத்துக்குமாரசாமி கோப்பாய் திரு. எம். ஜே. லோறன்ஸ் மானிப்பாய், திரு. இ. ஜே. லெஸ்லி அளவெட்டி, செல்வி ரி. சிவசக்தி கோப்பாய், செல்வி வசந்தி வைத்திலிங்கம் சுன்னாகம். செல்வி எஸ். தயாழினி நீர்வேலி, செல்வி ஆர். உமையாள் பண்டத்தரிப்பு, திரு. எ. வி. மகாதேவன் சுழிபுரம், செல்வி வீ. ஜமுனா, கோண்டாவில், செல்வி கே. ரவிசாந்தி யாழ்ப்பாணம், திருமதி ஜீ. ரி. ஜே. அன்னப்பு காரைநகர், 162-சி

புரட்சித் தலைவர் - மக்கள் திலகம்
முன்னாள் தமிழக முதல்வர்
அமரர் டாக்டர்
எம். ஜி. ஆர்.
7ம்- ஆண்டு நினைவு நாள்

டிசம்பர் 24, 25, 26, ஆம் திகதிகளில்
முப்பெரும் விழாவாக நடைபெறும்
இவ்விழா

கோக்குவில் மஞ்சவனப்பதி ஆலய திறந்த வெளிஅரங்கில்
அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவைத்தலைவர்
பொன். மதிமுகராசா தலைமையில் நடைபெறவிருக்கின்றது

24-12-94 அன்று குருநகர், பாஷையூர் சிலைகளுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகும். நினைவு நாள் நிகழ்வுகள் 25-12-94 ஞாயிறு அன்று

- 40 மைல் துவிச்சக்கரவண்டி ஓட்டப் போட்டி (ஆண்களுக்கானது)
- 15 மைல் துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி (பெண்களுக்கானது)
- 25 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மரதன் ஓட்டப்போட்டி (10 மைல் ஆண்களுக்கானது)
- 08 மைல் மூன்று சில்லு சைக்கிள் றிக்சோ ஓட்டப்போட்டி
- கழகங்களுக்கான கயிறு இழுத்தல் போட்டிகளும்

26 ஆம் திகதி தமிழ்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சிகள், ஆரம்பமாகி மங்கள இசை, தமிழ்மரபிசை, நினைவுப் பேருரை எம். ஜி. ஆர். விருது வழங்குதல், கவியரங்கு, பட்டிமன்றம், கரகாட்டம், நாடகம், நடனம், வில்லிசை, மெல்லிசை இசையமுதம், தமிழின சட்ட மன்றத்தில் விவாதம் போன்ற நிகழ்ச்சிகளுடன் இவ்வாண்டு விளையாட்டு போட்டிகளும் நடைபெறவிருக்கின்றன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் 20-12-94 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும் விண்ணப்பப்படிவங்களை தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும். போட்டியில் வெற்றிபெறும். வீரருக்கு எம். ஜி. ஆர். தங்கப்பதக்க விருது வழங்கப்படும். அன்பர்கள், அனுதாபிகள் அனைவரையும் ஆதரவு தருமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

பொது ஸ்தாபனங்கள் எம். ஜி. ஆர், திருவுருவப்படத்திற்கு மாலை சூட்டி மரியாதை செலுத்துமாறு அன்புடன் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

பங்குபற்றுபவர்கள் மேலதிக விபரங்களுக்கு தலைமைக் கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

— நன்றி —

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
அனைத்துலக எம். ஜி. ஆர் பேரவை
எம். ஜி. ஆர். இல்லம், தாவடி. கொக்குவில், தமிழீழம்.

★ புரட்சித் தலைவர் மக்கள் திலகம் ★ மனிதநேயம் மிக்க ஒரு தலைவர்
★ அவர் எமக்கு ஒரு கலங்கரை விளக்கம்
நினைவு நாள் சிறக்க எனது வாழ்த்துக்கள்
சரவண-பாலசிங்கம், தங்கவேலு, வண்ணார்பண்ணை.

(எ-4579)

# விஞ்ஞான, கணித போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சங்கானைக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளின் ஆண்டு 4, 5 மாணவர்களுக்கிடையே கோட்ட மட்டத்தில் நடாத்தப்பெற்ற விஞ்ஞான கணித வினுவிடைப் போட்டி முடிவுகள் பின்வருமாறு!

ஆண்டு 4

ப. அச்சுதன், யாழ்ப்பாணக் கல்லூரி, ந. நிலானி - யாழ்ப்பாணக் கல்லூரி, ப. பபிதா- சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை, பி. தாட்சாயினி பொன்னுலை வரதராஜப் பெருமாள் வீதி, ம. தாட்சாயினி அராலி சரஸ்வதி ம. வி., ஜெ, கௌசலா- தொல்புரம் அ. மி. த. க. பா.

ஆண்டு 5

செ. அபிராமி - யாழ்ப்பாணக் கல்லூரி, அ. கமிலஸ்-சங்கானை சிவப்பிரகாச ம,வி., ந. சுஜாந்தினி - சுழிபுரம் கிழக்கு அ, மி. த, க. பா, ஸ்ரீ. ஸ்ரீசியாம்-வட்டு திருஞானசம்பந்த வித்தியாசாலை, சி. உமைபாலன்-பொன்னுலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம்.

## கோமாரிக்கப்பலில் சீனி வந்தது

(அரியாலை)

பருத்தித்துறை இறங்குதுறையில் நேற்று முன்தினம் கோமாரி கப்பலில் இருந்து அரச அதிபரின் பெயரில் வந்த 896 மெற்றிக் தொன் சீனியும் இறக்கப்பட்டு யாழ். கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. -59

## திருவிழா

(அரியாலை)

யாழ். கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 20ந் திகதி திருநாள் திருப்பலி திருச்சொரூப பவனியுடன் நிறைவு பெற்றது. நவ நாட்களில் அருட்திரு எவ். ஏ. தேவராசா அடிகள்மறை உரை நிகழ்த்தினுர். -59

## அருள் ஊற்று

(யாழ்ப்பாணம்)

புனித மரியாள் ஆலயம் நாவலப்பிட்டியில் இருந்து 'அருள் ஊற்று' என்ற மாதப் பத்திரிகை ஒன்று வெளிவருகிறது,

இந்தப் பத்திரிகையில் புனித சவேரியாரின் திருவுடல்' ஜனவரியில் மக்கள் தரிசனத்திற்கு, திருத்தந்தையை வரவேற்க இலங்கை தயாராகிறது. அருட்தந்தை யோசவ் வாஸ் அடிகளார் போன்ற பல விடயங்கள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளது. - ம

# தமிழீழ நீதிமன்றில் நகை திருடியவருக்கு 1000 ரூபா அபராதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மறவன்புலோ பகுதியிலுள்ள உறவினர் ஒருவர் வீட்டில் சண்டிலிப்பாயை சேர்ந்த நபர் ஒருவர் தங்கி நின்றுவிட்டு அங்கிருந்த சுமார் 3000 ரூபா பெறுமதியான நகையினைத் திருடிச் சென்ற சம்பவம் ஒன்று அண்மையில் நிகழ்ந்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் மேற்படி நபரை தமிழீழ காவல் துறையினர் அண்மையில் கைது செய்து சாவகச்சேரி தமிழீழ மாவட்ட நீதிமன்றில் நீதியாளர் சுடர் முன்னிலையில் ஆஜர் செய்பினர்.

விசாரணையில் மேற்படிநபர் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து குற்றப் பணமாக ஆயிரம் ரூபாவும் தவறின் 40 நாள் கட்டாய சமூக சேவை செய்ய வண்டும் என்றும் நீதிமன்றில் தீர்ப்பளிக்கப்பட்டது திருடப்பட்ட பொருள் மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப் பட்டது. (155)

# 88 பிள்ளைகள் சமய தீட்சை பெற்றனர்

(கொழும்புத்துறை)

யாழ். இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையின் ஆதரவில் சைவப் பணிமனையில்' அண்மையில் 88 பிள்ளைகளுக்கு சமய தீட்சை பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரம் விநயகமூர்த்திககுருக்களினுல் வழங்கப்பட்டது.

இச்சபையினரால் இதே போன்று இலவச சமய பாட வகுப்புகளும், பண்ணிசை வகுப்புகளும் நடாத்தப்பட்டு வருவதாகச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (154)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு ஜெனரேற்றர் வசம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, பளை, மருதங்கேணி ஆகிய பகுதிகளிலுள்ள பொது வைத்தியசாலைகளுக்கு இரவு நேர மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக இப்பகுதிகளிலுள்ள பொது வைத்தியசாலைகளுக்கு கொழும்பிலிருந்து புதியஜெனரேற்றர்கள் சுகாதாரசேவைப் பணிப்பாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (162)

## மாதாந்தக் கொடுப்பனவு

(ஆனைப்பந்தி)

வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு மற்றும் தொழுநோய், காசநோய், புற்றுநோய் என்பவற்றுல் பாதிக்கப்பட்டோருக்கான உதவு தொகை என்பன தற்போது யாழ். பிரதம தபாலகத்தில் இயங்கும் மேற்படி பிரிவுகளின் தபாலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றன. (101)

# புனித சவேரியார் உடல்

## பக்தர்கள் பார்வைக்கு அனுமதி

(புதுடில்லி)

422 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்த பின்பும் அழியாத நிலையிலிருக்கும் புனித பிரான்ஸிஸ் சவேரியாரின் அதிசய உடலைப் பார்ப்பதற்கு இந்து, முஸ்லிம் பக்தர்களுக்கு இம்முறை அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் கோவா மாநிலத்தின் வனஜி நகரிலுள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் கடந்த 422 வருடங்களாக அழியாத நிலையிலிருக்கும் புனித சவேரியாரின் உடல், பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது.

மேற்படி தேவாலயத்தின் மையப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த புனித சவேரியாரின் உடலை அங்கிருந்து பொதுமக்களின் பார்வைக்காகப் பொது இடத்தில் வைக்கும் பணியில் இம்முறை இந்து, முஸ்லிம் பக்தர்கள் பக்திபரவசத்துடன் ஈடுபட்டனர்.

இதுவரை காலமும் இந்து. முஸ்லிம் பக்தர்கள் இப்பணியில் ஈடுபட அனுமதி வழங்கப்படவில்லை அடுத்த வருடம் தை மாதம் 7ம் திகதி வரை பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும் இப்புனித உடலைத் தரிசிப்பதற்காக உலகின் பல பாகங்களிலுமிருந்து 50 லட்சத்திற்கும் அதிகமான பக்தர் வரக்கூடுமென்று செய்திகள் தெரிவிக்கின்றன. வி இ

# யாழ்.மாவட்டத்திலிருந்து 39 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு 39 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது; வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திலிருந்து 1995ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இது பற்றிய அறிவித்தல்கள் சகல கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் வடக்கு-கிழக்கு மாகாண சபைக் கல்வித் திணைக்களத்தினுல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆங்கில, விஞ்ஞான, கலை, சங்கீத ஆரம்பக கல்வி ஆசிரியர்களுக்கு இடமாற்றம் கிடைத்துள்ளது. -162

பண்டத்தரிப்பு

# ப. நோ. கூ. சங்க புதிய இயக்குநர்சபை தெரிவு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக திரு. ச. செல்வரத்தினம், சங்கப் பொதுச் சபைக் கூட்டத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது 77 வாக்குகளைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டார்.

சித்தன்கேணி கணேச வித்தியாலய மண்டபத்தில் யாழ். உதவிக் கூட்டுறவு ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வாக்கெடுப்பு மூலம் இயக்குநர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்க உபதலைவராகதிரு.அ. லூயிஸ் (மாதகல்) தெரிவு செல்யப்பட்டார். இயக்குநர் சபை உறுப்பினர்களாக திரு. ச. இரத்தினசிங்கம் (பிரான்பற்று கிளை), திரு. மரியநாயகம் (சில்லாலை கிளை), திரு.ச. பிரபாகரன் (சித்திரைமேழி கிளை), திரு. க. நாகரத்தினம் (மாரீசன்கூடல் கிளை), திரு. அ. கிருஷ்ணகுமார் (நுணசை கிளை) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். 72-ரி

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சிக் கோட்டக் கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல், எதிர்வரும் 16ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

எனவே தென்மராட்சிக் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்துக் கிராமிய உற்பத்திக் குழுக்களின் உறுப்பினர்களையும் இதில் தவறுது கலந்துகொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்கிறது.

கோவில்களில்

# தடைப்பட்டுள்ள வழிபாடு நடைபெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

இன்றைய நெருக்கடி மிக்க சூழ்நிலையில் தமிழ் மக்களின் துயர் நீங்கவும், தினசரிபூசை வழிபாடுகள் தடைப்பட்டுள்ள திருக்கேதீஸ்வரமும் ஏனைய வழிபாட்டுத்தலங்களும் மீளத் திறக்கப்பட்டு பூசை வழிபாடுகள் நடைபெற வேண்டும்.

யாழ்.மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் வெள்ளிக்கிழமை மௌன விரதத்தின் மூன்றும் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட வெளியீடொன்றில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவில்கள், தரும நிலையங்கள், பாடசாலைகள், பொதுச் சொத்துக்கள் ஆரம்பித்த நோக்கங்களுக்கு மாசு ஏற்படாது பாதுகாத்துப் பயன் பெற சகல இந்து சமயிகளும், நிறுவனங்களும் முன்வருதல் அவசியமாகும் என்றும் இவ் வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (162)

## வீதி சீர்கேடு

(கொழும்புத்துறை)

வட்டுக்கோட்டை சந்தியிலிருந்து சித்தன்கேணி சந்தி வரை செல்லும் பிரதான வீதி போக்கு வரத்துச் செய்ய முடியாதளவிற்குக் குண்டும் குழியுமாகக்காட்சிஅளிக்கிறது -154

## பாதுகாப்பு நிலையத்தில் திருட்டு

(நெல்லியடி)

வைத்தியசாலை ஊழியர்களின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்டிருந்த சைக்கிளிலிருந்து சிறுதொகை பணமும் உடுப்புகளும் பட்டப் பகல் வேளையில் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அண்மையில் மந்திகை மருத்துவமனையில் நிகழ்ந்துள்ளது.

உடுப்புகளையும் பணத்தையும் இழந்த வைத்தியசாலை சிற்றூழியரான வே. நாகதாஸ் என்பவர் இதுசம்பந்தமாக வைத்தியசாலை மேற்பார்வையாளரிடமும் மாவட்ட வைத்திய அதிகாரியிடமும் முறையிட்டுள்ளார். 160

உதைபந்தாட்டம்:

# அறிவொளி கழகம் சாம்பியனுகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கினுல் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டப் போட்டியின் 'ஸி' பிரிவில் அறிவொளி விளையாட்டுக் கழகம் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அறிவொளி விளையாட்டுக் கழகத்துக்கும், உதய சூரியன் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற சாம்பியன் மோதலில், அறிவொளி கழகம் 2-1 கோல்களால் வெற்றி பெற்றது,

மூன்றும் இடத்துக்காக நடைபெற்ற மற்றுமொரு போட்டியில், தொடர்மாடி சென். லூட்ஸ் கழகம் யங்ஸ்ராரர் சுழகத்தை 3-1 கோல்கள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெற்ற மேற்படி இருபோட்டிகளுக்கும், திருவாளர்கள் அ. தேவராசா பி. கனியூட்டும் மத்தியஸ்தம் வகித்தார்கள். (வி)

## மரம் நடுகை

(கொழும்புத்துறை)

யாழ். மாநகராட்சி மன்றத்தின் அனுசரணையுடன் யாழ். ரோட்டறிக் கழகத்தினரின் ஆதரவில் அண்மையில் யாழ். மடம் வீதியில் மரங்கள் நாட்டப்பட்டுள்ளது. 154

## உலர் உணவுப் பொருட்கள்

(கொழும்புத்துறை)

கடல்தொழிலால் பாதிக்கப்பட்ட வலிகாமம் மேற்கு பிரதேச (சங்கானை) செயலகத்தைச் சேர்ந்த 1024 மீனவக் குடும்பங்களுக்கும் 1994ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குரிய இலவச உலர் உணவுப் பொருள்களை உடனடியாகப் பெற்று விநியோகம் செய்யும்படி. பிரதேச செயலகம் சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குப் பணித்துள்ளது. 154

# தேங்காய் உற்பத்தியைக் கூட்டுவதற்கு

# தென்னைகளுக்கு உரமிடும் ஆலோசனைகள்

எமது பிரதேசத்தில் மழைக் காலம் ஆகிய இவ்வேளையில் இளம், முதிர் தென்னை மரங்களுக்கு சேதன அல்லது அசேதனப் பசளையிடுவது வளர்ச்சியையும், விளைவையும் கூட்டுவதற்கு ஏதுவாக அமைகின்றது, எனவே டிசெம்பர் 94 முடியுமுன்னர தென்னைச்செய்கையாளர்கள் சேதன உரமாக மாட்டெரு, ஆட்டெரு, கோழி எரு, கிளிரிசிடியா இலை அல்லது இப்பில் இப்பில் இலைகளையும்; அசேதன உரமாக இளம் கன்றுக் கலவை Youug pahn Mixture - YPM) முதிர் மரக் கலவை (Adult Pahn Mixture - APM) யையும் பாவிக்கலாம். சிபார்சு செய்யப்பட்ட உரக்கலவைகள் நைதரசன், பொசுபரசு, பொட்டாசியம் ஆகிய மூன்று மகா தாவர போசனைகளைக் தன்னகத்தே கொண்டுள்ளது.

### தென்னைகளுக்கு சேதனப் பசளையிடல் முறை

பாளைவந்த தென்னை மரங்கள் ஒவ்வொன்றிற்கும், உலர் மாட்டெருவாயின் 30 கிலோ உடன் சப்போஸ் பொசுபேற் 400 கிலோவும் மியூறியற் ஒவ் பொட்டாசு 1 கிலோவும் கலந்து அடி மரத்திலிருந்து 3 அடி தூரத்தில் 3 அடி அகலமாக (அடி மரத்திலிருந்து 6 அடி மரத்திலிருந்து 6 அடி உட்பட்டதாக) அரை அடி ஆழத்திற்கு மட்டும். சுற்றவரக் குழிவெட்டி அதற்குள் மேற்குறிப்பிட்ட கலவையை இடுதல் வேண்டும். பின்பு இதனை மண்ணால் மூடி, பசளை வட்டத்திற்குள் தென்னோலை அல்லது பனை ஓலையினால் மூடி பத்திரக் கலவையாக்கி விடலாம்.

### மாடுகளைத் தென்னைமரத்தில் கட்டுதல்.

தென்னை அடி மரத்திலிருந்து 3 அடி தூரம் தள்ளி 3 அடி அகலமாக அரை ஆழத்திற்கு குழியாகவெட்டி பசளைப்பாத்தி Manurebasın ஏற்படுத்த வேண்டும், பின் 2 மாடுகளை 10 இரவுகளுக்கு தொடர்ந்து ஒரு மரத்தில் கட்டவேண்டும், கட்டும் போது எல்லா கழிவுகளும் பசளைப் பாத்திக்குள் விழுவதனை உறுதிப்படுத்தத்தக்க வகையில் மாடுகள் கட்டப்படல்வேண்டும். (6 அடிக்கு மேற்பட்ட நீளமுள்ள கயிறினைக் கட்டினால் எதுவித பிரயோசனமும் இல்லை).

இக்காலத்தின் பின்பு 200 கிலோ சப்போஸ்பொப்பேற்றும், 750 கிராம் மியூறியற் ஒவ் பொட்டாசும் பாத்திக்குள் விசிறப்பட்டு மண்ணினால் மூடி விடுதல் வேண்டும். இம்முறை வருடத்தில் ஒரு முறைசெய்தல் போதுமானது. இளம் தென்னங்கன்று, முதிர் தென்னைகளுக்கு செயற்கை உரமாக

### YPM (இளம் மரக்கலவை) APM (முதிர்மரக்கலவை) உரம் இடுதல்

தென்னைகளில் நைதரசன் பற்றுக்குறையினால் எல்லா இலைகளும் வெளிறிய பச்சையாகத் தோற்றமளிக்கும். பின்பு மஞ்சள் நிறமாகத் தோற்றமளித்து பின்பு சிவப்பு கலந்த நரை நிறமாக மாறுகின்றது. இறுதியாக வட்டுப் படிப்படியாகச் சிறிதாகும்.

பொட்டாசியம் பற்றுக்குறையினால், சிற்றிலையின் நடு நரம்பில் (ஈக்கிள்) இரு பக்கங்களிலும் துரு போன்ற புள்ளிகள் பரவலாகக் காணப்படும். எனவே YPM, APM உரங்களை வருடாவருடம் தென்னைகளுக்கு இடுவதனால் மேற்குறிப்பிட்ட பற்றுக்குறை காணப்படாது வளர்ச்சியும் விளைவும் அதிகரிக்கும்.

### இளம் தென்னைகளுக்கு YPM உரம் இடுதல்

சாதாரணமாக 5 வருடங்களுக்குட்பட்ட பாளை வராத தென்னைகளுக்கு YPM (Young Palm Mixture) இள மரக் கலவை என்ற உரத்தினை 6 மாதங்களுக்கு ஒரு தடவை ஆரம்பத்திலிருந்து 500 g YPM இலிருந்து 5வயதுடைய தென்னைகளுக்கு (பாளை வராத) $1\frac{1}{2}$ g வரை படிப்படியாக அதிகரித்து உரப்பிரயோயோகம் செய்யலாம். தென்னையின் அடியிலிருந்து $\frac{1}{2}$ அடி தூரம் தள்ளி பசளை வட்டத்தின் அதாவது மண்ணை சாதாரணமாக $\frac{1}{2}$ அடி ஆழம் வரை கொத்திப் பிரட்டி ஏற்படுத்தலாம் சுற்றுவட்டம் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு பாளை வரும் நேரத்தில் 5 அடியாக இருத்தல் வேண்டும். இப்படிக் கொத்திப் பிரட்டிய பின்பு அதற்குள் தென்னையின் வயதிற்கேற்ப YPMஇனை இடுதல் வேண்டும். உரமிட்ட பகுதிகளுக்கு மேலே காய்ந்த தென்னோலை அல்லது பனையோலையினால் மூடிவிடலாம்.

### முதிர் தென்னைகளுக்கு APM உரம் இடுதல்

மர அடியிலிருந்து 6 அடி தூரத்திற்கு மரத்தைச் சுற்றியுள்ள முழு நிலப் பரப்பளவினுள்ளும் APM (Adult Palm Mixture) ஒரு மரத்திற்கு $2\frac{1}{2}$ Kg வீதம் பிரயோகம் செய்தல் வேண்டும். மரத்தைச் சுற்றிக் களைகள் இருந்தால் களைகளை அகற்றவும். சாதாரணமாக $\frac{1}{2}$ அடி ஆழமாக 6 அடி சுற்று வட்டப் பரப்பு முழுவதும் கொத்திப் பிரட்டிய பின்பு $2\frac{1}{2}$ kg APM உரத்தினைத் தூவிவிட்டால் (கொத்திய பரப்பு முழுவதும்) போதுமானது. பின்பு பசளை வட்டத்தினைக் காய்ந்த தென்னோலை அல்லது பனை ஓலையினால் மூடிவிடவும். இப்படி வருடா வருடம் ஒரு தடவை உரப் பிரயோகம் செய்தால் அது போதுமானது.

எனவே உரப் பிரயோகம் சம்பந்தமாகவும், தென்னை சம்பந்தமான ஏனைய விளக்கங்கள் தேவைப்படும் தென்னைச் செய்கையாளர்கள் நல்லூர் கமநல சேவை நிலையத்தில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையில் தொடர்பு கொள்ளலாம்.

ஜெ. சத்தியேந்திரன்
யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்

# தேனீ குடிகள் கலைவதை தடுப்பதற்கான வழிகள்

இன்று தேனீ வளர்ப்பாளர்கள் இரண்டு வகையான பிரச்னைகளினால் தேனீ குடிகள் கலைவதனால் பாதிப்பு அடைகின்றனர். முக்கிய இரு பிரச்சனைகளும் மெழுது அந்தின் தாக்கமும், உணவுப்பற்றுக் குறையுமாகும்.

தேனீ குடிகளின் பிரதான எதிர்யாக மெழுகு அந்துக்கள் காணப்படுகின்றன. எமது பிரதேசத்தில் இரண்டு வகையான மெழுகு அந்துக்கள் காணப்படுகின்றன. ஒரு வகை இரண்டு சென்ரிமீற்றர் நீளமான பெரியவை. மற்றையது ஒரு சென்ரிமீற்றர் நீளமான சிறியவை. இவ் அந்து தேன் பெட்டியில் உள்ள வெடிப்புக்கள், துவாரங்கள், நீக்கல்களினூடாக முட்டைகளை இடும். முட்டைகள் பொரித்து புழுக்கள் வதைச் சட்டங்களை சென்றடைந்து வதைகளை ஊடறுத்து உண்ணும். முழு வதைகளும் உண்ணப்பட்டு அவற்றில் உள்ள இடைவெளிகளில் வலைகள் காணப்படும், மெழுகு அந்துப் புழுக்களின் தாக்கத்தை தேனீக்களால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு

(5ம் பக்கம் பார்க்க)

# சித்த மருத்துவத்தின் சிறப்பு

சித்த மருத்துவம், தீர்க்க இயலாத பற்பல வியாதிகளுக்கும் வியத்தகு முறையில் சிகிச்சை புரிந்து, பலரும் வியக்கும்வண்ணம் சிறப்புடையதாக விளங்குகின்றது. சித்த மருத்துவத்தில் இயற்கையாகக் கிடைக்கும் தேன், பால், மெழுகு, பிசின், குங்குலியம், மூலிகைகள், விதைகள், பூக்கள். வேர்கள், பட்டைகள், கட்டைகள் போன்ற பொருட்களும், மண்ணும் நீரும் கூட அநேக விதமான நோய்களில் சிகிச்சை முறைக்குப் பயன்படுகின்றது இம் மருத்துவ முறைகள் குடோரி வைத்தியம, வர்மக்கலை, காய கற்பம், மூப்பு, இரசவாதம், குருதி வாங்கல, தொக்கணம், ஒற்றுடம், வேதுபுகை, ஆசனம் போன்ற பல சிறப்பு முறைகள் பிணி நீக்கப் பயன்பட்டு வருகின்றன. இன்று மருத்துவ உலகிற்கும், மருத்துவத்துறைக்கும் பெரிய சவாலாக விளங்கும் எயிட்ஸ், மற்றும் புற்றுநோய். தொழு நோய் இன்னும் பல சொடிய வியாதிகட்கும் சித்த மருத்துவச் சிகிச்சை முறைகள் உள்ளன,

குடோரி வைத்தியம் அசுர வைத்தியமுறையாகும். தற்போது நல்ல மருத்துவத்தில் கையாளப்படும் ஊசி முறை ஆங்கிலத்தில் குடோரி வைத்தியம் என்ற முறையில் சித்தரால் கையாளட்பட்டது. இம் முறையில் மருத்துவப்பொருட்கள் பிணியாளரின் குருதிச் சுற்றோட்டத்தில் நேரடியாகக் கலக்கப்பட்டு பிணிகள் தீர்க்கப்பட்டுள்ளன ஆகவே ஊசி முறைக்கு வழிகோலியவர்கள் சித்தர்களே, குருதி வாங்கல் என்ற முறையில் நீண்ட நாட்களாக குணமடையாத பழுத்த கட்டிகள், அழுகிய சதைகள், கெட்ட குருதி ஆகியன அட்டையை உடலில் அந்த ஸ்தானங்களில் விட்டு உறிஞ்சச் செய்வதன் மூலம் பிணியாளரின் வேதனை குறைகிறது. சுட்டிகை என்ற முறை காக்கை வலிப்பு மற்றும் சிறு வலிகள் அழுகிய சதைகளை நீக்கப் பயன்படுகிறது. வர்மம் என்ற முறையில் நம் உடலில் உள்ள சில மர்ம நிலைகளைத் தட்டி தூண்டுவித்து, அடிபட்டு மயங்கிய நிலை மற்றும் என்பு முறிவு, மூளை நோய்கள், நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள், மற்றும் சில விபரீத நிலைகள் எல்லாம் குணப்படுத்தப்படுகின்றன. இம்முறை நவீன மருத்துவத்தில் தற்சமயம் பயன்படுத்தப்படுகின்ற "அக்குபஞ்சர்" என்ற முறையை ஒதது என்கிற கருத்து நிலவுகிறது. ஆனால் அது தவறு வர்மத்தில் நோயைப் பரிகரிக்கவம் முடியும். நோயை உண்டாக்கவும் முடியும் காய கற்பம் என்கின்ற முறை தம் உடப்பினை பிணியுறாத படி நடுநிலையில் வைத்திருந்து நரை, திரை, மூப்பு இவற்றையும் பிணிகளையும் நீக்க வழிவகை உள்ளது. இக்காய கற்ப முறை சித்த மருத்துவத்தில் நோய் வராமல் தடுக்கும் முறையாகும். "மூப்பு" இரசவாதம் என்ற முறைகளாலும் பிணிகள் நீக்கப்படுகின்றன. தொக்கணம் என்ற முறையால் உடல் முழுமையையும் சில தைலங்களைப் பூசி மருத்துவர் தம் இரு கைகளாலும் நோயாளியின் உடலைப் பிடித்து அழுத்தி, அமர்த்தி "மசாஜ்." செய்யும் முறையாகும் இம் முறையில் பக்கவாதம். முற்றுடன் வாதம் முதலியன குணமாகும், "ஒற்றடம்" என்ற முறை பலவகை வீக்கம், தலைவலி, வலி போன்றவற்றைக் குணமாக்குகின்றது. மற்ற மருத்துவத்தினால் பக்க விளைவுகள் ஏற்படும். சித்தமருத்துவமருந்துகள் பக்க விளைவுகள் ஏற்படுத்தாது. இதுவே இதன் சிறப்பு, சித்த மருத்துவ முறையில் பத்தியம் கடைப்பிடித்தல் அவசியம். அது நோயை விரைவாகக் குணப்டுத்தும்.

தொகுப்பு:
க. கனகராசா

# ஞாயிறு மஞ்சரி

## முதலை

முதலைகளில் இருபது வகை முதலைகள் இருக்கின்றன. அமெரிக்கமுதலைகளான அல்லிகேட்டர் என்ற முதலை வகையைத் தவிர மற்ற எல்லா வகை முதலைகளும் எண்ணிக்கையில் குறைந்து கொண்டே வருகின்றன. முதலைகளின் எண்ணிக்கை குறைவதற்குக் காரணம் வேட்டை தான். முதலைகளை மனிதர்கள் வேட்டையாடி அதைக் கொன்று முதலைத் தோல், கொழுப்பு இவற்றை விற்றுப் பணம் பண்ணிவிடுகிறார்கள்.

சதுப்பு நிலம் என்று சொல்லக் கூடிய சேற்று நிலப்பகுதியில் தான் முதலைகள் வசிக்க விரும்பும். சேற்று நிலப் பகுதிகள் எல்லாம் நகர்ப் புறங்களாக மாறிவருவதால் முதலைகள் வாழும் இடத்திற்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது.

அமெரிக்காவில், முதலைகள், மருத்துவப் பரிசோதனைக்கு மிகவும் பயன்படுவதாக விஞ்ஞானிகள் நினைக்கிறார்கள். எலி. சுண்டெலி, முயல், குரங்கு இவற்றைவிட முதலைகளின் உடல் இயற்கைத்தன்மைகள் மெதுவாக இயங்குவதால், மருத்துவப் பரிசோதனைக்கு முதலைகள் மிகவும் ஏற்றவை என்கிறார்கள் இந்த விஞ்ஞானிகள்!

முதலைகளை மிகச் சுலபமாகப் பிடித்துவிட முடியாது. பல மணி நேரம் முயற்சி செய்து, அதன் மூக்குப் பகுதியில் வளையத்தைமாட்டி, முதலைகளைப் பிடிக்க வேண்டும்

கோழி முட்டைகளை மின்சார முறையில் குஞ்சு பொக்ரிகச் செய்வது போல் முதலை முட்டைகளையும் குஞ்சு பொரிக்க செய்கிறார்கள். இங்கல்ல, அமெரிக்காவில் இப்பொழுது அமெரிக்காவில் முதலையின் தோலை வெளிநாடுகளுக்குஏற்றுமதி செய்யச் சட்டம் அனுமதிப்பதில்லை.

முதலைகள், குட்டி முதலைகளையே விழுங்கிவிடும். அதனால் முதலைகளைச் சிறு குட்டிகளாக இருக்கும்போதே தனித்தனியாகப் பிரித்து வைக்கிறார்கள். முதலைத் தோல் பதப்படுத்தப்பட்ட பின்பு வழவழப்பாக இருக்கும். உலகெங்கிலும் முதலைத் தோலை விரும்புபவர்கள் இருக்கிறார்கள்.

மிகச் சிறந்த முதலைத் தோல் எங்கே கிடைக்கிறது. பாப்பா நியூசினியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலிருந்து வரும் முதலைத் தோல் மிகச் சிறந்தவை.

இந்த வேகத்தில் போனால் முதலை இனமே அழிந்துவிடும்:

## தெரிந்து கொள்ளுங்கள்

13-ம் நூற்றாண்டில் இத்தாலிய கலைஞர்கள் 'நூவேல்' என்னும் பெயர் கொண்ட பல கதைத் கொத்துக்களை வெளியிட்டனர். நாம் தற்காலத்தில் வழங்கும் நாவல் என்னும் சொல் நூவேல் என்னும் இச் சொல்லிருந்தே வந்தது.

0 0 0

இந்தியாவில் பம்பாய் வாசிகள் தான் அதிகமாக சிகரட் பிடிக்கிறார்கள் இங்கு மாதத்திற்கு 52 கோடி சிகரட்டுகள் விற்பனையாகின்றன. இதன் மதிப்பு 5 கோடி ரூபாவிற்கு மேலாகும்.

0 0 0 0

பூட்டான் நாட்டு ஆண்கள் அயல் நாட்டு பெண்களை மணந்து கொண்டால் அவர்களுக்கு பூட்டான் நாட்டில் அரசாங்க உத்தியோகம் கிடையாது.

### மணிவாக்கு

இரக்கம் உள்ள நெஞ்சில் அன்பு பிறக்கும். நாணமுள்ள நெஞ்சில் அறம் பிறக்கும். ஆணவம் இல்லாத நெஞ்சில் மரியாதை பிறக்கும். பேராசையில்லாத நெஞ்சில் பக்தி பிறக்கும்.
- கனேடிய பழமொழி

## நமது நோக்கு

### ஆடு நனைகிறதென்று..!

''ஆனையிறவுப்பாதை திறந்துவிடப்பட்டால் வடபகுதி மக்களுக்குநிவாரணம் வழங்குவது மிகச் சுலபமாக இருக்கும்!'' என இலங்கை வானொலி அறிவித்துள்ளது.

''அப்பாடா! ஆறு வாரங்களாகத் தடைப்பட்டிருக்கும் நிவாரணம் ஓரிரு நாட்களில் கிடைத்துவிடும்!'' என மக்கள் மருண்டுவிடுவார்கள் என யாராவது எண்ணினால் ஏமாந்தேவிடுவார்கள்!

அதுமாத்திரமல்ல - வடக்கே உற்பத்தியாகும் பொருட்களைத் தெற்கே கொண்டு வருவதற்கும், தென்பகுதியில் உற்பத்தியாகும் பொருட்களை வடக்கே கொண்டு செல்வதற்கும் இந்தப் பாதை மூடப்பட்டிருப்பது இடையூறாக இருக்கிறது. பாதை திறந்தால் பொருட்களின் விலை குறையும் எனவும் வானொலி அறிவித்துள்ளது.

நிபுணர்கள் பலர் சேர்ந்து - நீள நினைந்து - அக்கறையோடு ஆராய்ந்து பொருளாதாரக் கோட்பாடு ஒன்று வெளிவந்துள்ளது என்று மக்கள் நினைப்பார்கள்?

பாதையை மூடியது யார்? ஏன் மூடப்பட்டது? குடாநாட்டின்மீது பாரிய இராணுவ நடவடிக்கையின் ஓர் வியூகமாக, குடாநாட்டைச் சுற்றியுள்ள சகல பாதைகளும் மூடப்பட்டது என்பதை மக்கள் அறியாமலா இருக்கிறார்கள்?

அத்தோடு - யாழ். ஆயர் பூநகரிப் பாதைபற்றிக் கேட்டபோது கொடுக்கப்பட்ட விளக்கம் என்ன?

'அப்பாதை உடைந்து போயுள்ளது; அதைத் திறப்பதிற் சிரமங்கள் உண்டு; செலவு அதிகம் என இராணுவ தரப்பிற் கூறப்பட்டிருக்கிறது!

தமிழ் மக்கள் காது குத்திக் கடுக்கண் அணிந்து வந்தது உண்மைதான். ஆனால் 1958க் கலவரத்தின்போது, தெற்கிலே காதைப் பார்த்து ஏதோ வெல்லாம் செய்தார்கள் என்பதால் காது குத்துவதைத் தவிர்த்துள்ளார்கள்.

இப்போது - யாருக்குக் காது குத்துகிறார்கள்.

உற்பத்திக்கு அதிக விலை பெறலாம், பொருட்கள் மலிவாகக் கிடைக்கும், நிவாரணம் விரைவாகக் கிடைக்கும் என மக்கள் நினைத்தார்கள். ஏனெனில் ஆடு நனைகிறதென்று இரங்கியதன் கதையை மறக்கவில்லை!

# பொதுமக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை விசாரிக்க ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

கல்வி, உயர்கல்வி அமைச்சு கடந்த காலங்களில் பொது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றி விசாரணை செய்வதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளது.

கடந்த பதினேழு வருடகாலப் பகுதியில் கல்வி, உயர் கல்வித்துறையில் அநீதிகள் விளைவிக்கப்பட்டுள்ளதாக 15,000க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பொதுமக்களால் கல்வி உயர்கல்வி, அமைச்சுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது,

இந்த அநீதிகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்து நியாயமான நடவடிக்கை எடுப்பதற்காக கல்வி, உயர்கல்வி அமைச்சினால் ஒரு விசாரணைக்குழு அண்மையில் நியமிக்கப்பட்டது. இந்த விசாரணைக் குழு பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளைக் கோரியிருந்தது.

பல்வேறு வகையிலும் கல்வி உயர்கல்வித் துறையில பழிவாங்கல் பதவி உயர்வு மறுப்புக்கள், மற்றும் அநீதிகள் இழைக்கப்பட்டதாக 15,000க்கும் மேற்பட்ட முறைப்பாடு பொதுமக்களிடமிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்த முறைப்பாடுகளை விசாரணை செய்யும்பணி விரைவில ஆரம்பிக்கப்படுமென்று கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு கடந்த 17 வருடங்களாக இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றி விசாரணை செய்வதற்கு ஏனைய அமைச்சுக்களும் சில விசாரணைக்குழுக்களை நியமித்துள்ளன. ஆயினும் அந்த அமைச்சுக்களுக்குக்கிடைத்த முறைப்பாடுகளைவிட ஐந்து மடங்கு கூடுதல் முறைப்பாடுகள்கல்வி அமைச்சுக்கு வந்துசேர்ந்துள்ளது. (162-இ)

### அமல உற்பவத் திருவிழா

[அரியாலை]

சகல கத்தோலிக்கதேவாலயங்களிலும், கடந்த 8ம் திகதி வியாழக்கிழமை புனித மரியாள் அமல உற்பவத் திருவிழா கொண்டாடப்பட்டது.

யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருவிழாத் திருப்பலியை, பங்குத் தந்தை அருட்திரு. ஜே. நீக்கிலஸ் அடிகள் நிறைவேற்றி வைத்தார் -59

### தேனீ குடிகள்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

[4ம் பக்கத் தொடர்ச்சி]

வர இயலாதபோது தேனீர்கள் விட்டு வேறு இடத்துக்கு இடம் பெயரும்,

இப்பிரச்சனையைத் தடுக்க தேன் கூடுகள் நீக்கல்கள், வெடிப்புக்கள், துவாரங்கள், அற்றதாகஇருத்தல்வேண்டும். நல்ல பெட்டிகளில் தேனீ செல்லும் வாசலூடு மெழுகு அந்து உட்புகுந்து அடித்தளப் பலகையில் முட்டைகளை இடும். முட்டைகள் பொரித்து சிறிய புழுக்கல் அடித்தளப் பலகையில் கொட்டுண்டு கிடக்கும். மெழுகுக் கழிவுகளை உண்டு வளரும் வளர்ந்த புழுக்கள் வதைச்சட்டங்களை சென்றடைந்து வதைகளைத் தாக்கும். தேனீ வளர்ப்பாளர்கள் அடித்தளப்பலகை கிழமைக்கு ஒருமுறை தூரிகையினாலோ, தேங்காய்த்தும்பினாலோ சுத்தம் செய்துவந்தால் இத்தாக்கத்தை பூரணமாக கட்டுப்படுத்த முடியும்.

இரண்டாவது பிரச்சனை உணவுப் பற்றுக்குறையினால் தேனீ சமுதாயம் நலிவடைவதாகும். இது மழை காலம். பூக்கும்மரங்கள் அருகி காணப்படுகின்றது. எனவே தேனீக்களுக்கு உணவுத்தட்டுப்பாடு ஏற்படலாம். தேனீக்களுக்கு உணவு அருகி வரும் காலங்களில் தேனீக்கள் இல்லாத வதைகளைக் கொண்ட பலவீனமான தேனீச்சமுதாயங்களாக மாறும். இச்சந்தர்ப்பங்களில் மிகச்சுலபமாக மெழுது அந்தினால் தாக்கப்படுகின்றன. இத்தாக்கத்தின் விளைவால் கூட்டை விட்டு அகலும்.

உணவுப் பற்றுக்குறையை நிவர்த்திசெய்வதற்காக சீனிக் கரைசல் உணவாக கொடுக்கப்படவேண்டும். சீனியும் வெந்நீரும் சமபங்காக எடுத்து கரைத்து கொடுக்கலாம். நாளாந்தம் சிறிதளவு சீனிக் கரைசலை கொடுப்பதன் மூலம் தேனீக்களின் இனவிருத்தியை ஊக்குவிக்கமுடியும். உணவு கொடுத்தலை மாலை நேரங்களில் செய்வது சிறந்தது உணவு கொடுக்கும்போது தேனீ பெட்டியில் எறும்பு ஏறுதவாறு தடுத்தல்வேண்டும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-12-11
ஞாயிறு இரவு

| | |
|---|---|
| 08-01 | இசையரங்கம்-நிகழ்ச்சியில் எஸ். பாலசிங்கம் அவர்களின் ஹார்மோனிய வாத்தியக் கச்சேரி. |
| 08-30 | செய்திகள். |
| 08-40 | தொடர் நாடகம்- பொன். கணேசமூர்த்தி எழுதும் 'இலங்கை மண்' 50ம் அங்கம். |
| 09-00 | மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும். |

1994-12-12
திங்கள் காலை

| | |
|---|---|
| 07-02 | மாவீர வணக்கம். |
| 07-15 | நீங்கள் கேட்டவை. |
| 07-30 | செய்திகள். |
| 07-35 | பத்திரிகை செய்திகள் |
| 07-40 | நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி. |
| 08-00 | மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும். |

### பலதும் பத்தும்

#### அராலியூர்

பம்பாய் வெங்காயச் செய்கையில் முன்னோடியாக விளங்கும் அராலி, தமிழ்ப் பணிக்கும் பலரைத் தந்தது.

இன்று - பல வானொலி நாடகங்களைத் தந்து கொண்டிருக்கிறார் அராலியூர் சுந்தரம்பிள்ளை. பேராசிரியர் சி. க. சிற்றம்பலமும் இந்த ஊரைச் சேர்ந்தவரே.

நூறுண்டுகளுக்கு முன் - இவ்வூரைச் சேர்ந்த முத்துக்குமாருப்புலவர், தேவசகாயம்பிள்ளை நாடகம், பதுமாபதி நாடகம்போன்ற பல நாடகங்களை எழுதினர்.

வாக்கிய பஞ்சாங்கத்தைத் தனது பதினெட்டாவது வயதிலே கணித்து, 16-5-1967ல் வெளியிட்ட இராமலிங்கமுனிவர் இங்குதான் வாழ்ந்தவர். விசுவநாதசாத்திரியார், ந. நாராயணஐயர், அருணசலம் போன்ற பல தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்த ஊர் இது!

—மயூரன்

**தண்ணீரை கடலில் செல்லவிடாமலே—நாம்**
**நன்னீரை நிலத்தின்கீழ் சேர்த்திடுவோம்**

## நீர்வள மேம்பாட்டு சபை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வளத்தைப் பேணிக்காத்து, உச்ச பயன்பாட்டை அடைவதற்காகவும் நீர் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகளையும் ஒன்றிணைக்கும் நோக்கோடும் அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமையில் துறைசார்ந்த நிபுணர்களின் ஒன்று கூடல் நடைபெற்றது.

நீருடன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடலின் தீர்மானப்படி நீர்வளமேம்பாட்டு சபை என்ற எமது பிரதேசத்தின் நீர்வள அபிவிருத்திக்கும பயன்பாட்டுக்கும் பொறுப்பான ஒரு அமைப்பை ஏற்படுத்துவதற்கு கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இச்சபையை அமைப்பதற்கான யாப்புகள், செயற்பாட்டு வரையறைகள், முன்னுரிமை வழ்ங்கும் திட்டங்கள் போன்றவற்றை ஆராய்வதற்கான குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

நீர்வள அபிவிருத்தியில் ஈடுபாடும் ஆர்வமும் கொண்ட பொதுமக்களிடமிருந்து, நீர்வளம் தொடர்பான ஆவணங்களின் பிரதிகள், தகவல்கள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன, மேலதிகத கவல்கள் தர விரும்புவோரும் பெறவிரும்புவோரும் கொக்குவில் செம்பியன்லேன் இல, 10 உட்கட்டுமானப் பகுதியுடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கபடுகிறது.

### ஊழியர்க்கான திட்டம்

(கொழும்புத்துறை)

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான திட்டம் ஒன்றை கூட்டுறவுச் சங்கங்கள் நடைமுறைப் படுத்தி வருகின்றன.

இத்திட்டத்திற்கு அமைவாக ஊழியர்கள் மாதம் 25 ரூபாவும், சங்கம் 50 ரூபாவும் பங்களிப்பு செய்யவேண்டும்என்று சங்க வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (154)

## இராசி பலன்

**11 - 12 - 1994**

ஞாயிற்றுக்கிழமை

**(தமிழுக்குகார்த்திகை25)**

நவமி இரவு 10-20 வரை: உத்தரம் வைகறை 3-06 வரை; அமிர்த யோகம், இராகுகாலம், மாலை 4-32 முதல் 6-02 வரை. சுபவேளை காலை 9-04 முதல் 10-22 வரை.

மேடம்: தொழில் பகை, வேலைப்பளு, அலைச்சல்

இடபம்: கூடிப் பேசுதல், பணப்புழக்கம், மனத்துறவு

மிதுனம்: தொழில் முயற்சி. இல்லச் சிறப்பு, பாராட்டு.

கடகம்; முன்கோபம், குடும்பப் பிரிவு, மனக்குமுறல்

சிங்கம்: அடம்பிடித்தல், மனைவி துயர், வேதனை

கன்னி: தெய்வீகப் பணி, நண்பர் சகாயம், காரியசித்தி

துலாம்: கல்வியால் பெருமை, குடும்ப சுகம், பயணம்.

விருச்சிகம்; மனப்பயம், தொழில் நஷ்டம், வீணபகை

தனுசு: விரோதிகள் துயர், குடும்பக் கவலை, ஒதுங்கிப் போதல்

மகரம்: தியாக சிந்தனை, புதிய உறவு, முயற்சி பலிதம்

கும்பம்; உள்ளக் குமுறல், உறவினர் வெறுப்பு, பணமுடை

மீனம்: விதண்டா வாதம், கோள் சொல்லல், முதியோர் அறிவுரை

ஜோஸ்யர்

### ஆடுகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

பாஷையூர்பகுதியில் கடந்த சில மாதங்களாக ஆடுகளைத் திருடும் சம்பவம் அதிகரித்துள்ளது.

இதுவரை இப்பகுதியில் 25க்கும் மேற்பட்ட ஆடுகள் இரவு நேரத்தில் திருடப்பட்டு விட்டதாக, ஆடுகளைப் பறிகொடுத்தவர்கள் காவல்துறையில் முறைப்பாடு செய்துள்ளார்கள். (வி)

### இலவச வெளியீடு

[கொழும்புத்துறை)

புலோலி மேற்கு தரும நிதிய இலவச வெளியீடான இன, மத வேற்றுமையற்ற ஆத்ம சிந்தனைச் சஞ்சிகையின் ஆடி, ஆவணி, புரட்டாதி மாத இதழ் வெளிவந்துள்ளது. -154

### கண்டெடுத்த பொருள்

செல்வன் கிருஷ்ணராசா கோபிராஜ் (இல: 711641912—V) மாணவர் என்பவருடைய அடையாளஅட்டை கோண்டாவிலில் அளவெட்டி வடக்கு க. தேவராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு, காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

### இன்று

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் உடுவில் கோட்ட அரசினர் பாடசாலைகளில் சித்தியடைந்து முதலாவது இடத்தைப் பெற்ற மாணவர்களுக்குமான பாராட்டு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் நா. நடேசன் தலைமையில் நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த ஆய்வரங்கும், பயிலரங்கும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி ப. 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறும். இன்றைய நிகழ்வில் ''சோதிட சிந்தனைகள்'' பற்றி தம்பு சண்முகமும், ''செவ்வாய் திசை'' பற்றி ப. கனகலிங்கமும் ஆய்வுரை வழங்குவர். பயில் அரங்கை, கே. சாம்பசிவமும், பி. சந்திரசேகரமும் நடாத்துவர்.

(எஸ்)

★ இந்திய மாநில தேர்தல்கள்

## 4 மாநிலங்களினதும் ஆட்சியை காங்கிரஸ் கட்சி இழந்தது

(புதுடில்லி)

இந்தியாவில் நான்கு மாநிலங்களில் நடைபெற்ற சட்டசபை தேர்தலில் படுதோல்வியடைந்துள்ள காங்கிரஸ்கட்சி இதுவரை காலமும் நடாத்தி வந்த ஆட்சி அதிகாரத்தையும் இழந்துள்ளது.

227 தொகுதிகள் கொண்ட கர்நாடக சட்டப்பேரவையில் இதுவரை முடிவு அறிவிக்கப்பட்ட 224 தொகுதியில் ஜனதாதள்-115, காங்கிரஸ்-34, பா ஜ.க-39, கர்-காங்கிரஸ்- 10 இடங்களையும் பெற்றன.

292 தொகுதிகளை கொண்ட ஆந்திரா சட்டப் பேரவையில் இதுவரை முடிவு அறிவிக்கப்பட்ட 250 தொகுதிகளில் தெலுங்குதேசம்-190, காங்கிரஸ் 21, இந்திய கம்யூனிஸ்-17, மாக்ஸிய கம்யூனிஸ்ட்-15, பா.ஜ க-1 இடத்தையும் பெற்றுள்ளன.

32 தொகுதிகளைக் கொண்ட சிக்கிம் சட்டப்பேரவையில் சிக்கிம் ஜனநாய முன்னணி-20, காங்கிரஸ்-1, எஸ். எஸ். பி-9, சுயேட்சை- 2 இடங்களையும் பெற்றன.

40 தொகுதிகளை கொண்ட கோவா சட்டப்பேரவையில் இதுவரை முடிவு அறிவிக்கப்பட்ட 29 தொகுதிகளில் காங்கிரஸ்-13, மகாராஷ்ர வாதி கோமந்தக் கட்சி-10, பா. ஜ. க-2 ஏனையவை-4 இடங்களையும் பெற்றன. இங்கு மகாராஷ்ரவாதி கோமந்தக்கட்சிக்கு காங்கிரஸ் தவிர்ந்த ஏனையவை ஆதரவு வழங்குகின்றன.

இதற்கிடையில் ஆந்திராவில திரு. என்.ரி.ராமராவ் தலைமையில் புதிய அமைச்சரவை நாளை திங்கட்கிழமை பதவியேற்கவுள்ளது. சி

## பிரதமரின் மகனும் படு தோல்வி

(ஹைதராபாத்)

ஆந்திராவில் இடம்பெற்ற சட்ட சபைத் தேர்தலில் பிரதமர் நரசிம்மராவின் மகனும் படுதோல்வியடைந்துள்ளார்.

காங்கிர ஸ் சார்பில் போட்டியிட்ட பிரதமரின் மகன் தெலுங்கு தே ச ட்சி ... சுமார் 35 0 ... ராக் ... ள தோல்வியடைந்துள்ளார்.

ஆந்திரா, கர்நாடகாவில் காங்கிரஸ் படுதோல்வியடைந்ததற்கு காங்கிரஸ் கட்சிக்குள் நிலவும் மிக மோசமான காஷ்டிப்பூசலே காரணம் என விமர்சகர்கள் கூறியுள்ளனர். சு

கிரிக்கெட்:

## மே. இந்தியா 6:296

(புதுடில்லி)

இந்திய - மே. இந்திய அணிகளுக்கிடையில் மொகாலியில் நடைபெறும் 3 வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின்முதலாம் நாள் ஆட்டமுடிவில் மே. இந்தியா 6 விக்கெட் இழப்பிற்கு 296 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அடம்ஸ் 84 ஓட்டங்களையும் கூப்பர் 43 ஓட்டங்களையும் லாரா 40 ஓட்டங்களையும் பெற்றனர். சி

## மட்டக்களப்பு வெள்ளப்பெருக்கினால் 80.000 குடும்பங்கள் இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் மூன்றுவது தடவையாக தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் எண்பதாயிரம் குடும்பங்கள் மீண்டும் இடம்பெயர்ந்துள்ளன.

மட்டக்களப்பிலுள்ள மாமாங்கம், கூழாவெளி, கதிரேசன்கேணி, ஜெயந்திபுரம், காந்தி கிராமம், கல்லடி, எலும்மிச்சை முனை. நாவற்குடா. ஆரையம்பதி, ஏருவூர், கிரான் குளம், வெல்லாவெளி வவுணதீவு, பெரிய போரதீவு. ஒட்டமாவடி, வாழைச்சேனை, வாரை, கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகள் வெள்ளத்தினால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் எண்பதாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக இதுவரை திரட்டப்பட்ட விபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. ரி-சி

## வைத்தியர் குடும்பத்தை ஏமாற்றிய ஆசாமி

(ஆனைப்பந்தி)

வீட்டிலிருந்து வெளியே புறப்பட்ட வைத்தியர் விபத்தில் சிக்கி ஆபத்தான நிலையில் இருப்பதாக பொய்கூறி வைத்தியரின் குடும்பத்தினரிடம் ஆயிரம் ரூபா பணத்தை அபகரித்துச் சென்றுள்ளார் இனந்தெரியாத ஆசாமி ஒருவர்.

கடந்த வெள்ளி (9ம் திகதி) யாழ். புகையிரத நிலையத்தடியில் இடம்பெற்ற இச் சம்பவம்பற்றி தெரியவருவதாவது:

இப்பகுதியில் வைத்திய நிலையம் ஒன்றை நடாத்தி வரும் பிரஸ்தாப வைத்தியர் சம்பவதினம் மதியமளவில் பொருட்கள் வாங்குவதற்காக மோட்டார் சைக்கிளில் வெளியே சென்றாராம்.

இவர் சென்று சில மணி நேரத்தின் பின் வீட்டுக்கு வந்த மேற்படி ஆசாமி வெளியே சென்ற வைத்தியர் விபத்தில் சிக்கியதால் ஆபத்தான நிலையிலுள்ளார். உடனடி செலவிற்காக ஆயிரம் ரூபா வாங்கிவரும்படி என்னை அனுப்பினார் என்றாராம்.

வைத்தியரினதும், குடும்பத்தினரதும் பெயர், ஊர் விபரங்களை சரியாகச் சொன்னதால் ஆசாமின் பேச்சை நம்பிய குடும்பத்தினரும் அவரிடம் ஆயிரம் ரூபா பணத்தை கொடுக்கவே அவரும் அதை வாங்கிக்கொண்டு தன் வழியே சென்றுவிட்டாராம்.

வெளியே சென்ற வைத்தியர் எவ்வித தீங்குமின்றி திரும்பிய பின்னரே குடும்பத்தினருக்கு தாம் ஏமாற்றப்பட்டமை தெரியவந்ததாம். -101-சி

## இனப்பிரச்னை தீர்வு முயற்சி வெற்றி பெற வேண்டும்"

– இந்திய பிரதமர் வாழ்த்து

(புதுடில்டி)

வடக்கு—கிழக்கு பிரச்னையை தீர்த்துவைப்பதற்கு இலங்கை எடுத்து வரும் முயற்சிகள் வெற்றிபெற வேண்டும் என்று இந்திய பிரதமர் பி. வி. நரசிம்மராவ் வாழ்த்தியுள்ளார்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியப் பிரதமரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்காவிற்கு பொதுமக்கள் வழங்கிய தீர்க்கமான ஆணையும் சமாதானத்தில் வடபகுதி மக்களுக்குள்ள விருப்பமும் பிரச்னைக்கு தீர்வுகாணப்படவேண்டும் எ பதை டரதிபலிக்கின்றன என்று இந்திய பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு சமாதான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் குறிப்பிட்டார்.

இலங்கை ஜனாதிபதியின் கடிதம் ஒன்றையும் திரு, லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியப் பிரதமரிடம் கையளித்தார். இந்தக் கடிதத்தில் தமது நல்லெண்ணத்தை இலங்கை ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ரி-சி

## சரணடைவதற்கு வீரப்பன் தயாரில்லை

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் சகாவோடு தாம் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாக கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் சி.வி. சங்கர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; பவாஸசாகர் பகுதியில் இப் பேச்சுவார்த்தை இடம்பெற்றதாகவும் பேச்சுவார்த்தை சுமுகமான நிலையில் இடம்பெற்றதாகவும் தெரிவித்தார், எனினும் எச்சந்தர்ப்பத்திலும் வீரப்பன் அரசாங்கத்திடம் சரணடைவது பற்றி பேச்சு நடைபெறவில்லையென்றும் தெரிவித்த அவர் மீண்டும் இப் பிரதிநிதி நம்மை சந்திக்கக் கூடும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார். க-சி

### தொழில் நுட்ப தேர்வு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 14ம் திகதி புதன்கிழமை நடைபெறவிருக்கும் ஆண்டு 9 கனிஷ்ட தொழில நுட்பத் தேர்வுக்குத் தோற்றும் மாணவரின் வரவு இடாப்புப் பட்டியலைப் பெற்ற பாடசாலை அதிபர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வரவு இடாப்புடனும் அதன் பிரதியொன்றுடனும் தத்தமது கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளரை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு சந்திக்கும்படி யாழ் வலயம 1 இன் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்வதோடு அப் பிரதிகளை 13ம் திகதி காலை 10-00 மணிக்கு முன் தவறாது சேர்ப்பிக்குமாறும் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுக் கொள்கிறார். -சி

### தலைமையக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்முடிவினாலேயே விமானப் படை அதிகாரிகள் முரண்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. -ரி-சி

### இந்திய பிரதமர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுகையில்; இவ்வளவு தலைகுனிவான தோல்விக்குபிறகு ஆட்சியில் இருக்க காங்கிரஸிற்கு தார்மீக உரிமை இல்லை. எனவே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடாத்தப்பட வேண்டுமெனக் கூறினார்.

இதேவேளை பிரதமர் நரசிம்மராவ் தலைமையில் நேற்று கூடிய காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ராவுக்கு தங்களது ஆதரவை முழுமையாக தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கடந்த 9-ம் திகதி பலாலி சிறிலங்கா இராணுவமுகாம் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட திடீர் மோதலில் மேஜர் பத்மகீர்த்தி [அசோகன்] (பொன்னையா மோகனதாஸ்' பேக்கரிவீதி தம்பகாமம் - பளை) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இவரது திருவுருவப்படம் நாளை திங்கள் காலை 10 மணிக்கு பளை சந்தை மைதானத்தில் வைக்கப்பட்டு இறுதி அஞ்சலிக் கூட்டம் நடைபெற்று கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் நாட்டப்படும். சி

### லஷ்மன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் பற்றி வெளிவிவகார அமைச்சர் திரு. லஷ்மன் கதிர்காமர் இந்தியத் தலைவர்களுக்கு எடுத்து விளக்கியுள்ளார்.

பொ. ச. மு. அரசின் கொள்கைகளை வெளிவிவகார கொள்கை, சார்க் அமைப்பு தொடர்பான பிரச்னைகள் பற்றி அவர் இந்தியத் தலைவர்களுக்கு விளக்கிக் கூறினர். ரிசி

### பேச்சுக்களை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பார்ப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 'லங்காதீப' வுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது: நடந்து முடிந்த பேச்சுவார்த்தைகள் பற்றி எமக்கு ஒன்றும் தெரியாது. அப்படி அவர்கள் தெரிவித்திருந்தால், நாங்களும் அதுபற்றி எங்கள் கருத்துக்களை கூறியிருப்போம் என்றார், ம-சி

### காங்கிரஸ்- அ. தி. மு.க.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பொதுத்தேர்தலில் காங்கிரசிற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்துமென்பதால் தெற்கில் ஒரு மாநிலத்தையாவது யாவது கைப்பற்றவேண்டுமானால் காங்கிரஸ் அ. தி. மு. கவுடன் சேர்வதை தவிர அதற்கு வேறு வழியில்லை.

மேற்படி தேர்தல் முடிவுகள் ஒரு விதத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கும் திருப்தியை ஏற்படுத்தியிருக்கும் ஆந்திரா. கர்நாடகாவில் காங்கிரஸ் வென்றிருந்தால் தமிழகத்தில் ஜெயலலிதாவின் ஆட்சி கலைக்கப்பட்டிருக்கும். இனி அந்த நிலை ஏற்படாதென்றே கூறவேண்டும் எனவும் தெரிவித்தார், -சி

### நேற்று அதிகாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மி. மீ. ஷெல்கள் 3, நடுத்தரவைகள் 1157, கைக்குண்டு 1, ஏ. கே. எல். எம். ஜி. ரவைக்கூடு தாங்கி அணிகள் 4, ஏ. கே. ரவைக்கூடு தாங்கி அணிகள் 2, ஏ. கே. எல்.ஜி. ரவைக் தொடர்கள் 50, தலைக்கவசம் 3, ராணுவச் சப்பாத்துக்கள் ஏழு சோடி, ராணுவ பை 1, தண்ணீர் கொள்கலன்கள் 3, இவற்றுக்கான தாங்கி அணிகள் 13, சப்பாத்துகள் 5 சோடி என்பன வங்காலை தொடர் காவலரண் மீதான தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன,

இத்தாக்குதலில் கப்டன் மரகதன், திலீப், (முத்துச்சாமி சந்திரகுமார் மட்டு), லெப். பாண்டு (யக்கூவு மரியகிறிஸ்டின் மன்னார்) 2 லெப் ராகபவான் [மரியதாஸ் பத்திநாதன் முருங்கன்] ஆகியோர் வீரச் சாவைத் தழுவிக்கொண்டனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். சி-ரி

### ராணுவம்—பொலிஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது அதனை அரசு கையாள்வது சரியா என்பது குறித்து நாடாளுமன்றம் கேள்வி எழுப்பக்கூடிய பல அதிகாரங்களும் வழங்கக்கூடியதாகவும் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும் எனவும் கூறினர். -சி

### யுதத நிறுத்தத்திற்கு

(1ம் பக்கத் தொடாசசி)

படை வட்டாரங்கள் தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிது.

இதேவேளை யுத்தநிறுத்த காலப்பகுதியில் கிழக்கில் படையினரின் நிலைப்பாடு குறித்தும்தீவிரமாக ஆராயப்பட்டுள்ளதாம். -சி

### பிரபாவின்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்டுள்ளது.

புலிகளின்பதிலை பொறுத்தே யுத்த நிறுத்தத்திற்கானதிகதி அறிவிக்கப்படுமெனவும், சமாதான பேச்சுக்கான திகதி நிர்ணயிக்கப்படுமெனவும் அமைச்சர் ரத்வத்தை ஏற்கனவே தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

### யுத்த நிறுத்த

1ம் பக்கத தொட ச்சி)

தளபாடங்கள் பெரும்பாலும் இங்கு வந்துசேரும்.

அரசின் இந்த நடவடிக்கையானது அக்காலப் பகுதியில் யுத்த நிறுத்த நடவடிக்கையை மீறும் செயலாக அமைந்து விடுமெனவும் கருதப்படலாம் எனவும் கூறப்படுகிறது. -சி

### ஐ. தே. க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பணத்தை திரு. விஜயதுங்க செலவழித்துள்ளாராம்.

இது குறித்து அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென கட்சி உறுப்பினர்கள் பலரும் தலைமைப் பீடத்தை கேட்டுள்ளனர். இதேவேளை கட்சிப் பணத்தை திரு. விஜயதுங்கா தமது இஷ்டப்படியே செலவழித்ததாக கட்சியின் பொருளாளரான கொழும்பு மாநகர பதில்முதலவர் திரு. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post OfficeSri uLanka nder Licence Number B/16336/B-